2. வெள்ளிக் குறியிடாத வினாக்கள்.

ACQUISITION OF LAND FOR ROYAPETTAH HOSPITAL.

51. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Honourable the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that vacant lands were acquired from private parties for the expansion of the Royapettah Government Hospital in Madras; and

(*b*) if so, the details of the parties from whom the lands were acquired, the extent acquired, the rate of compensation paid and the total amount paid?

A.—The Government have a proposal to acquire private lands for expansion of Government Royapettah Hospital. It has not materialised as the land owner has gone to the Court to set aside the acquisition proposal.

சென்னை ராயப்பேட்டை மருத்துவ மனையை விரிவுபடுத்த தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய திட்டம் அரசிடம் உள்ளது. நிலச் சொந்தக்காரர் மேற்படி ஆர்ஜிதத்தை தள்ளுபடி செய்ய நீதிமன்றத்திற்கு மனு செய்துள்ளபடியால், இந்தத் திட்டம் அமுலாக்கப்படாமலிருக்கிறது.

கொள்ளிடத்தின் குறுக்கே பாலம்

52 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்கா மணல்மேட்டிற்கும், காட்டுமன்னார் குடிக்கும் இடையே கொள்ளிடத்தில் குறுக்கே பாலம் ஒன்று அமைப்பதற்கான மதிப்பீடு ஏதேனும் தயாரிக்கப்பட்டுள்ளதா?

விடை—

இல்லை.

No.

நரிமுடுக்கு—குறிச்சி சாலை

53 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி நரிமுடுக்கிலிருந்து குறிச்சி வரையிலுள்ள கொள்ளிடக் கரையினை கப்பிச்சாலையாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

No.

EXPORT ORDERS FOR KHADI AND VILLAGE INDUSTRIES PRODUCTS.

54. Q.—THIRU N. DENNIS: Will the Honourable the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Khadi and Village Industries Board has received a large number of orders from foreign countries for various items during the calendar year 1973;

(b) if so, the details of the items sought for; and

(c) the countries seeking them?

A.—(a) Yes.

(b) (1) Palmyrah Fibre; and

(2) Palmyrah stalks.

(c) (1) United Kingdom;

(2) Irish Republic;

(3) Italy;

(4) Belgium;

(5) Holland;

(6) Denmark;

(7) Japan;

(8) Africa;

(9) Australia;

(10) U.S.A.; and

(11) Canada.

விடை—

(அ) ஆம்.

(இ) (1) பனந்தும்பு (மற்றும்) (2) பனை ஈர்க்கு.

(உ) (1) இங்கிலாந்து, (2) ஐரிஷ் குடியரசு, (3) இத்தாலி, (4) பெல்ஜியம், (5) ஹாலந்து, (6) டென்மார்க், (7) ஜப்பான், (8) ஆப்பிரிக்கா, (9) ஆஸ்திரேலியா, (10) அமெரிக்கா (மற்றும்) (11) கனடா.

WOMEN'S COLLEGES.

55. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) the number of colleges exclusively for ladies in the State as on this date; and

(*b*) the number proposed to be opened?

	Government.	*Aided.*
A.—(*a*) Arts Colleges	12	35
Training Colleges	2	8

(*b*) The matter is under the consideration of the Government.

	சர்க்கார்	தனியார்
(அ) கலைக்கல்லூரி	12	35
பயிற்சிக் கல்லூரி	2	8

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

(Cases of Poisoning.)

56. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Health be pleased to state—

The number of food poisoning cases admitted in the Government Hospitals in the City of Madras for the periods 1971–72 and 1972–73?

A.—The particulars regarding the number of food poisoning cases admitted in the city hospitals during 1971–72 and 1972–73 are as follows:—

Year.	*Number of cases.*
1971–72	202.
1972–73	428.

1974 ஏப்ரல் 20]

1971-72 மற்றும் 1972-73-ஆம் ஆண்டுகளில் நஞ்சு கலந்த உணவு உண்டு சென்னையிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் களின் எண்ணிக்கை வருமாறு—

ஆண்டு	எண்ணிக்கை
1971-72	**202**
1972-73	**428**

கரும்பு உற்பத்தி

57 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1972-73-ல் கரும்பு உற்பத்தி எவ்வளவு?

விடை—

97,70,150 மெட்ரிக் டன்.

(9,86,560 Metric Tonne in terms of ' Gur.)

(வெல்ல அளவில் 9,86,560 மெட்ரிக் டன்).

WOMENS SPECIALS OPERATED BY PALLAVAN TRANSPORT CORPORATION.

58. Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Honourable the Minister for Transport be pleased to state—

(*a*) the routes in which Women's Specials are run by the Pallavan Transport Corporation in Madras; and

(*b*) the collections made by these routes during the calendar years 1972–73.

A.—(a) During the years 1972-73, on an average, about 48 Women 's Special trips were operated daily along 17 bus routes in Madras City during week days only.

(*b*) A sum of Rs. 900 per day was collected from all Women 's Special trips on an average.

(அ) சென்னை நகரில் 1972-73-ஆம் ஆண்டுகளில் வேலை நாட் களில் மட்டும் சற்றேறக்குறைய 48 பெண்களுக்கு மட்டுமே உரிய சிறப்புப் பேருந்துகள் தினசரி 17 பேருந்து வழித்தடங்களில் இயக்கப்பட்டன.

[1974 ஏப்ரல் 20

(இ) சற்றேறக்குறைய ரூ. 900 வருவாயாக பெண்கள் மட்டுமே செல்லும் சிறப்புப் பேருந்துகள் மூலம் தினசரி பெறப் பட்டது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டவர்கள்

59 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 டிசம்பர் திங்களில் இருந்தபடி தமிழகம் முழுவதும் உள்ள வேலைவாய்ப்பினை தேடித்தரும் அலுவலகங்களில் (Employment Exchanges) பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) திருச்சி மாவட்டத்தில் மட்டும் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஆண், பெண் முறையே எவ்வளவு ?

விடை—

(அ) 1973 டிசம்பர் திங்கள் 31-ம் நாளில் தமிழகம் முழுவதும் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டவர் களின் எண்ணிக்கை வருமாறு :—

ஆண்	பெண்	மொத்தம்
4,73,631	1,17,973	5,91,604

(இ) திருச்சி மாவட்டத்தில் மட்டும் பதிவு செய்து கொண்ட வர்களின் எண்ணிக்கை வருமாறு :—

ஆண்	பெண்	மொத்தம்
60,403	8,676	69,079

பழனி கோவிலின் கீழ் உள்ள சித்த மருத்துவ மனை

60 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி கோவிலின் சார்பில் உள்ள சித்த மருத்துவச் சாலையில் விஷக்கடிகளுக்குச் சிறப்பான முறையில் மருத்துவம் பார்க்கப்படுவது உண்மையா ?

1974 ஏப்ரல் 20]

(இ) ஆம் எனில், விஷக்கடிகளுக்கு என்னென்ன மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள்?

விடை—

(அ) ஆம்.

(இ) விஷக்கடிகளுக்கு பார்வதி பரிணயம் என்ற சித்த வைத்திய நூலில் உள்ள முறையைப் பின்பற்றிக் கீழ்க்கண்ட மருந்துக் கலவையை தயார் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது :—

மருந்து செய்முறை.

சுத்தி செய்த ரசம் 1 பலம், சுத்தி செய்த கந்தகம் 1 பலம், மனோசிலை 1 பலம், பொரித்த வெங்காரம் 1 பலம், துருசு 1 பலம், பெருங்காயம் 1 பலம், வேப்பன் பருப்பு 1 பலம், வெள்ளை பாஷாணம் அல்லது சங்கு பாஷாணம் 1 பலம், சுத்தி செய்த நேர்வாளம் 1 பலம்—இவைகளை எருக்கம் பால் சேர்த்து மை போல் அரைத்துக் கொண்டு வேண்டுமளவிற்கு வேப்பெண்ணெய் விட்டு மேலும் மை போல அரைத்து கொம்புடப்பி அல்லது பாட்டிலில் எடுத்து வைத்துக்கொள்ளப்படுகிறது.

விஷம் தீண்டியவர்களுக்கு பெரியவர்களுக்கு மிளகளவு மருந்தை எடுத்து வெற்றிலையில் வைத்து மென்று விழுங்கச் சொல்லப்படுகிறது.

மயக்கமுற்ற நிலையில் உள்ளவர்களுக்கு வெற்றிலைச் சாற்றில் அரைத்துக் கொடுக்கப்படுகிறது. அல்லது சாப்பிடும் உப்பும் வெற்றிலையும் கலந்து கசக்கிக் கண்ணில் 2 அல்லது மூன்று சொட்டு விட்டால் மயக்கம் தெளிந்து வாய் திறக்கும் குணம் உடனே ஏற்படும். அதிக மயக்கமடைந்து ஜீவன் இருக்கும் குணம் தெரியும் நிலையில் உள்ளவர்களுக்கு நெற்றிக்கு மேல் தலையில் ஒரு அங்குல நீளத்திற்கு கண்ணாடித் துண்டினால் கீறி இந்த மருந்தைத் தேய்த்து ஒரு வெற்றிலையை மேல் வைத்து உத்தடம் கொடுத்தால் உயிர் மீள்வது அனுபவத்தில் கண்டுள்ளது.

அவசியத்துக்குத் தக்கபடி முதல் தடவை மருந்து கொடுத்த பின் இரண்டு மணிக்குப் பின்னர் மீண்டும் மருந்து கொடுக்கலாம்.

பத்தியம்.—உப்பு நீக்கி ஒரு நாள் இருத்தல் வேண்டும்.

ஆடு மாடுகளுக்கும் இந்த மருந்தினைக் கொடுக்கலாம். மருந்தின் அளவு நான்கு பங்காகும்.

முக்கூடல்—கடையம்சாலை

61 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 17—12—1973-ம் தேதி மழையினால் திருநெல்வேலி மாவட்டம், முக்கூடலிலிருந்து புதுப்பட்டி வழியாக கடையம் செல்லும் பஸ் மார்க்கம் பாதிக்கப்பட்டு உள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

விடை—

(அ) ஆம்.

(இ) இச்சாலையில் ஏற்பட்ட உடைப்புகள் உடனடியாக செம்மைப்படுத்தப்பட்டு சாலை பேருந்து போக்குவரத்திற்கு உகந்ததாக செய்யப்பட்டது.

(a) Yes.

(b) Breaches occurred in this road were closed and the road was made fit for bus traffic immediately.

MAHALIR MANDRAMS.

62. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the number of Mahalir Mandrams (மாதர் சங்கங்கள்) functioning in Kanyakumari district, Panchayat—Union—wise?

A.—The number of Mahalir Mandrams (மாதர் சங்கங்கள்) functioning in Kanyakumari District are as follows:

Name of Panchayat Unions.	No. of Mahalir Mandrams.
1. Agastheeswaram	36.
2. Kurunthecode	30.
3. Thovalai	29.
4. Melpuram	30
5. Munchirai	39.
6. Rajakkamangalam	30.
7. Killiyur	35.
8. Thuckalay	30.
9. Thiruvattar	30.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிவரும் மகளிர் மன்றங்களின் (மாதர் சங்கங்கள்) எண்ணிக்கை வருமாறு :—

ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்.	மகளிர் மன்றங்களின் எண்ணிக்கை.
1. அகஸ்தீஸ்வரம்	36
2. குருந்தென்கோடு	30
3. தோவாளை	29
4. மேல்புரம்	30
5. முன்சிறை	39
6. இராஜக்கமங்கலம்	30
7. கிள்ளியூர்	36
8. தக்கலை	30
9. திருவட்டார்	30

School for the Deaf at Kottaram

63. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether any grant is given by the Government to the School for the deaf at Kottaram in Kanyakumari district, and

(*b*) if so, the details of the grant made during the calendar years 1972 and 1973?

A.—Yes.

(*b*) In December 1972 a sum of Rs. 922 was sanctioned as maintenance grant to the school for the year 1971-72. A sum of Rs. 1,100 being the maintenance grant to the school will be sanctioned for the year 1972-73.

(அ) ஆம்.

(இ) இப்பள்ளிக்கு 1971-72-க்கு உரிய பராமரிப்பு மானியமாக ரூ. 922 1972-அம் வருடம் டிசம்பரில் வழங்கப்பட்டது. 1972-73 ஆம் ஆண்டுக்குரிய பராமரிப்பு மானியமாக ரூ. 1,100 வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Marketing of Chicks

64.*Q*.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the places where special service societes are funct oning to market chicks produced from the Chick Hatcheries functioning in the State?

A.—There are no special service societies to market the chicks produced from the Hatcheries functioning in the State.

There are three Hatcheries in this State, one at Kappalur (Madurai District) another at Kattupakkam (Chingleput District) and another at Hosur (Dharmapuri District). These hatcheries supply a day-old chicks to the Poultry Breeders Co-operative Societies and the Panchayat Unions whenever they place their indents.

இம்மாநிலத்தில் செயல்பட்டு வரும் கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையங்களிலிருந்து உற்பத்தியாகும் கோழிக் குஞ்சுகளின் விற்பனைக்கென்று தனி பணிச் சங்கங்கள் ஏதும் இல்லை.

இம்மாநிலத்தில் கப்பலூரில் (மதுரை மாவட்டம்) ஒன்றும், காட்டுப்பாக்கத்தில் (செங்கற்பட்டு மாவட்டம்) ஒன்றும், ஓசூரில் (தருமபுரி மாவட்டம்) ஒன்றுமாக கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மூன்று உள்ளன. கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும் ஊராட்சி ஒன்றியங்களும் தேவைக் குறிப்புகளை அனுப்பும் போதெல்லாம் ஒரு நாள் வயதுள்ள கோழிக்குஞ்சுகளை இந்நிலையங்கள் அவைகட்கு வழங்கி வருகின்றன.

FINANCIAL ASSISTANCE FROM INDUSTRIAL INVESTMENT CORPORATION.

65. *Q*.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

The financial assistnce rendered by the Tamil Nadu Industrial Investment Corporation, industry-wise during the period 1972–73?

1974 ஏப்ரல் 20]

A.—The industry-wise details of financial assistance given by the Tamil Nadu Industrial Investment Corporation Limited during 1972–73 are given below :—

Rupees in Lakhs

Serial No. (1)	Type of Industry. (2)	Small—Scale. No. (3)	Small—Scale. Amount. (4)	Others. No. (5)	Others. Amount. (6)
	CASH LOANS.				
1	Food Manufacturing Industries.	17	25.85	2	17.65
2	Paper and Paper Products.	..	..	1	13.00
3	Rubber and Rubber Products.	1	0.10	..	..
4	Manufacture of Textiles.	5	4.13	6	51·07
5	Chemical and Chemical Products.	7	15 14	3	53.89
6	Manufacture of Basic Matal Industries.	4	11.60	3	37.00
7	Manufacture of Machinery except Electrical machinery.	13	11.55	1	7.50
8	Manufacture of Metal Products except machinery.	7	5.22	..	..
9	Manufacture of electrical machinery, apparatus.	..	..	2	15.00
10	Hotel Industries	..	..	2	40.00
11	Transport (Road Operators).	16	8.56	..	..
12	Rural Medical Practitioners.	8	5.85	..	..
13	Manufacture of furniture and fixtures.	2	1.20	..	..
14	Manufacture of leather Products.	3	3.34	..	..
15	Manufacture of Miscellaneous Industries.	3	3,11	2	5.05
16	Manufacture of Gas.	..	..	1	4.60
17	Manufacture of Transport equipment.	6	6.99	4	27.61

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

DEFERRED PAYMENT GUARANTEE.

1 Textiles.	..	..	5	88.23
2 Basic Metal Industries.	..	..	1	3.90

UNDERWRITING AGREEMENTS.

1 Non-Metallic Mineral Products.	..	..	1	2.50
2 Chemicals and Chemical Products.	..	..	1	10.00
3 Hotel Industry.	..	..	1	5.00
4 Basic Metal Industry.	..	..	1	4 25

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) 1970–71-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக்குழுவின் அறிக்கை.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I rise to present the report of the Committee on Public Accounts of the State of Tamil Nadu for the year 1970–71.

(ஆ) உணவு உற்பத்தித் துறை, குடிமைப் பொருள் வழங்கு துறை (இரண்டாம் பகுதி) ஆகியவற்றின் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள்.

THIRU V. KRISHNAMURTHI : Sir, I rise to present the report of the Committee on Estimates on Food Production Department and Civil Supplies Department, Part II. Report on Civil Supplies Department, Part II are under print. Copies will be circulated to Members later.

4. அறிவிப்புகள்

(அ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1974–75-ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப்பேரவையின் பதினைறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு, கீழ்க்கண்ட பதினைறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. டி. இராசரத்தினம்
2. திரு. க. உரொ. எட்மண்ட்
3. திரு. டி. கணபதி